# மக்கள் தொகை மற்றும் வீடமைப்பு கணக்கெடுப்பிற்கு ஒத்துழைப்பு வழங்குவீர்!

## டான்ஸ்ரீ நோர் முகமது யாக்கோப் வலியுறுத்து

(தா.சரளா தேவி)

கோலாலம்பூர், ஜூலை 7-

நாட்டின் மேம்பாட்டு வியூக மற்றும் கொள்கைகளை இயற்றுவதற்கு மக்கள் தொகை மற்றும் வீடமைப்பு கணக்கெடுப்பு இன்றியமையாத பங்கை ஆற்றுகின்றது. அவ்வகையில் நேற்று தொடங்கப்பட்ட இந்த கணக்கெடுப்பு பணிக்கு முழு ஒத்துழைப்பை வழங்கும்படி பொது மக்களை பிரதமர் துறை அமைச்சர் டான்ஸ்ரீ நோர் முகமது யாக்கோப் கேட்டுக் கொண்டார்.

1963ஆம் ஆண்டு மலேசியா தோற்றுவிக்கப்பட்டது முதல் மக்கள் மற்றும் வீடமைப்பு கணக்கெடுப்பு ஒவ்வொரு 10 ஆண்டுகளுக்கு ஒருமுறை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. 1970, 1980, 1991 மற்றும் 2000 ஆகிய ஆண்டுகளில் இதற்கு முன்பு இந்நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டது. இவ்வாண்டு ஐந்தாவது முறையாக இந்த கணக் கெடுப்பு மேற்கொள்ளப்படுகிறது என்று இங்கு 2010 ஆம் ஆண்டுக்கான மக்கள் மற்றும் வீடமைப்பு கணக் கெடுப்பை அதிகாரப்பூர்வமாகத் தொடக்கி வைத்து உரை நிகழ்த் துகையில் குறிப்பிட்டார்.

நாடு முழுமையும் நேற்று தொடங்கி வரும் ஆகஸ்டு 22ஆம் தேதி வரையில் நீடிக்கும் இந்த கணக்கெடுப்பு நடவடிக்கையில் 26,000திற்கும் மேற்பட்ட பணியாளர்கள் மற்றும் 3,900 கண்காணிப்பாளர்கள் ஈடு படுவர்.குடும்ப உறுப்பினர்களின் வயது, இனம், கல்வி தகுதி, சமயம் உள்ளிட்ட பல்வேறு விவரங்களை இவர்கள் சேகரிப்பர்.இவர்கள் அனைவரும் முழு ஒத்துழைப்பை வழங்க வேண்டும் என்று அமைச்சர் கேட்டுக் கொண்டார்.

மக்கள் அளிக்கும் விவரங்கள் அரசாங்கம் ஐந்து ஆண்டு மேம்பாட்டு திட்டம் மற்றும் வருடாந்திர வரவு செலவை திட்டமிட உதவும். குறிப் பாக, பொது மக்களின் மேம்பாட்டு திட்டங்களுக்கு ஒதுக்கீட்டை முடிவு செய்ய உதவும் என்றார்.

அதே வேளையில், நாட்டின் சமூக மேம்பாட்டிற்காக அரசாங்கம் மேற்கொண்ட திட்டங்கள் எந்த அளவு பலனை அளித்துள்ளது மற்றும் அடுத்த கட்ட நடவடிக்கையை அரசாங்கம் மேற்கொள்வதற்கு எந்த அளவு உதவியுள்ளது என்பதை அளவிடவும்




*டான்ஸ்ரீ நோர் முகமது மக்கள் மற்றும் வீடமைப்பு கணக்கெடுப்பை அதிகாரப்பூர்வமாகத் தொடக்கி வைக்கும் காட்சி. அருகில் டத்தோ வான் ரம்லா மற்றும் இவ்விழா ஏற்பாட்டு குழுத் தலைவர் டாக்டர் அப்துல் ரஹ்மான் ஹாசான்.* ***படம் எம்.ரவி.***

உறுதுணை புரியும் என்று அமைச்சர் விவரித்தார். ஒவ்வொரு மாநிலத்திற் கான மத்திய அரசாங்கத்தின் ஒதுக்கீட்டை நிர்ணயிப்பதற்கு அடிப்படை வளமாக இந்த கணக் கெடுப்பு திகழ்கிறது. இந்த ஒதுக்கீடு குடிநீர் திட்டம் மற்றும் சாலை போன்ற திட்டங்களை மாநில அரசாங்கங்கள் மேற் கொள்வதற்காக வழங்கப்படும்.

இதைத் தவிர்த்து, வயது அடிப்படையில் மேற்கொள்ளப்படும் கணக்கெடுப்பு எத்தனை பள்ளிகள், ஆரம்பப் பள்ளிகள் அல்லது இடைநிலைப் பள்ளிகள், திறன் பயிற்சி மையங்கள் மற்றும் உயர் கல்வி நிலையங்கள் போன்றவற்றின் எண்ணிக்கையை நிர்ணயிக்க உதவும்.கிளினிக்குகள், அரசாங்க மருத்துவமனைகள் மற்றும் வீடமைப்பு பகுதிகள் போன்றவற்றின் எண்ணிக்கையை முடிவு செய்வதற்கும் இந்த விவரங்கள் முக்கியம் என்றார்.

தொடர்ந்து மாநில மற்றும் வட்டார நிலையிலான வேலை மீதான விவரங்கள் அரசாங்க மற்றும் தனியார் நிறுவனங்கள் குறிப்பிட்ட பகுதிகளில் தொழிற் சாலைகளை அமைப்பதற்குத் திட்டமிட உதவும். நெடுஞ் சாலை, பாலம், குடிநீர் மற்றும் மின்சாரம் போன்ற அடிப்படை வசதிகளை அமைப்பதற்கும் இந்த விவரங்கள் மிகவும் தேவை என்பதை அமைச்சர் சுட்டிக் காட்டினார்.

நாட்டின் தனி நபர் வருமானத் தைக் கணக்கிட பெரிய அளவிலான பொருளாதாரம் பயன்படுத்தப் படுகிறது. இந்த அடிப்படையில் 2010ஆம் ஆண்டு தனி நபர் வருமானம் 26,420 வெள்ளி அல்லது 8,260 அமெரிக்க டாலர் என்று மதிப்பிடப் பட்டுள்ளது.வரும் 2011-2015ஆம் ஆண்டு கால கட்டத்தில் இத்துறைக் கான தனிநபர் வருமானம் 6 விழுக்காடு உயர்வு கண்டு 38,850 வெள்ளி அல்லது 12,140 அமெரிக்க டாலரை எட்ட வேண்டும் என்று பத்தாவது மலேசிய திட்டம் இலக்கு வகுத்திருப்பதை அமைச்சர் சுட்டிக் காட்டினார்.

இவற்றிற்கு அப்பால் மக்கள் தொகை கணக்கெடுப்பு உள்நாட்டு தேவை, தொழிலாளர்கள் எண்ணிக்கை, வேலையில்லாத வர்களின் எண்ணிக்கை ஆகியவற்றை மதிப்பிடுவதற்கும் இன்றி யமையாதது. நாட்டின் பொருளாதார வியூகத்தை வரைவதற்கு அடிப்படை கூறுகளாக இவை திகழ்கின்றன என்றார்.

கணக்கெடுப்பு மேற்கொள்பவர் களிடம் சரியான மற்றும் முழுமையான தகவல்களை பொதுமக்கள் அளிக்க வேண்டும். இந்தக் கணக்கெடுப்பு முழுமை பெறுவதில் தாங்கள் வழங்கும் ஒத்துழைப்பு மிகவும் முக்கியம் என்பதை இவர்கள் உணர வேண்டும். இம்முறை மக்கள் மற்றும் வீடமைப்பு கணக்கெடுப்பு மேற்கொள் வதில் புள்ளி விவர இலாகா மேற் கொண்டிருக்கும் புதிய அணுகு முறைகளை அமைச்சர் பாராட்டினார். குடியிருப்பு இடங்களை அடையாளம் காணவரை படத்தைப் பயன்படுத்து வது, வழக்க மான பேட்டி வாயிலாக மக்களிடம் விவரங்கள் சேகரிக்கும் முறையைத் தவிர்த்து இணையம் வாயிலாக விவரங்களைப் பூர்த்தி செய்வது போன்றவை இவற்றில் அடங்கும்.

விவரங்களை வழங்கு வதில் மயக்கம், தயக்கம் காட்டத் தேவையில்லை. காரணம், 1960 ஆம் ஆண்டு மக்கள் மற்றும் வீடமைப்பு கணக்கெடுப்பு சட்டம் செக்‌ஷன் 19 பிரிவு ஒன்றின்படி இந்த விவரங் கள் யாவும் யாரிடமும் வெளியிடப்படமாட்டாது என்று நோர் முகமது உத்தரவாதம் அளித்தார்.

இதனிடையே, இந்த கணக் கெடுப்பு பணி ஒட்டு மொத்த மக்கள் மற்றும் வீடமைப்புகளை உட் படுத்தியிருப்பதால் புள்ளி விவர இலாகா வினால் தனித்து இதனை மேற் கொள்ள இயலவில்லை. தகவல் தொடர்பு மற்றும் பாரம்பரிய அமைச்சு மற்றும் அதன் நிறுவனங்கள், கூட்டரசு பிரதேச மற்றும் நகர்ப்புற நல்வாழ்வு அமைச்சு மற்றும் அதன் நிறுவனங்கள், மாநில செயலக அலுவலகங்கள் உள்பட பல்வேறு நிறுவனங் களின் ஒத்துழைப்பின் கீழ் இந்நடவடிக்கை மேற் கொள்ளப்படும் என்று நிகழ்ச்சியில் உரை நிகழ்த் திய மக்கள் மற்றும் வீட மைப்பு ஆணையர் டத்தோ ஹாஜா வான் ரம்லா வான் அப்துல் ராவூஃப் தெரிவித் தார்.